# இலங்கையில் மாற்றுக் கருத்துக்களுக்கெதிரான அடக்குமுறை

ஏப்பிரல் 2014





ஹம்பாந்தோட்டையில் இரு பாரிய அபிவிருத்திச் செயல்திட்டங்களை எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பார்வையிடும் சுற்றுலாவில் செய்தி சேகரிக்கும் ஊடகவியலாளர்களை ஓர் ஆளுங்கட்சி ஆதரவாளர் முட்டைகளால் இலக்கு வைத்து தாக்குகையில் அதனைப் பொலிசார் வேறு வழியின்றி பார்த்துக்கொண்டு நிற்கின்றனர் (படங்கள்: லங்காதீப)

இன்ஃபோர்ம் மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் நிலையம்
informcolombo@gmail.com

# உள்ளடக்கப்பட்ட விடயங்கள்

அ. யுத்தக் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலுக்காக ஆதரித்து வாதாடுவோர் களுக்கு அச்சுறுத்தல்கள்

ஆ. பேச்சு சுதந்திரம் மீதான தாக்குதல்களும் மட்டுப்பாடுகளும்

இ. ஒன்றிணையும் சுதந்திரம் மீதான தாக்குதல்களும் மட்டுப்பாடுகளும்

ஈ. பல்கலைக் கழக மாணவ செயற்பாட்டாளர்கள் மீதான அடக்குமுறை

உ. மதச் சுதந்திரங்களை ஊக்குவிக்கும் ஒரு மனித உரிமைகள் பாதுகாவலருக்கு அச்சுறுதல்கள்

ஊ. மனித உரிமைப் பாதுகாவலர் சிறைக் கைதிகளிடம் விஜயம் செய்வதற்கு கட்டுப்பாடுகள்

எ. எதிரணி அரசியல் கட்சிகள் மீதான அடக்குமுறை

*இலங்கையின் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தவும் கண்காணிக்கவும் 1990 இன்ஃபோர்ம் (INFORM) நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. குறிப்பாக இன மோதல்களும் போரும் நிலவிய சூழலிலேயே இது உருவாக்கப்பட்டது. உள்ளூர், தேசிய, சர்வதேச மட்டங்களில் எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் இடையீடுகளை மேற்கொள்வதிலும், அறிக்கைகளை வெளியிடுவதிலும், அது தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. திட்டமிட்ட வகையிலும் மற்றும் அநேகம் உரிமைகள் மீறப்படுகின்ற சமூகங்களை மையப்படுத்தி செயற்படுவதிலும் இன்ஃபோர்ம் தன்னை அர்ப்பணித்தது. தற்போது தேர்தல்களைக் கண்காணிப்பதிலும் கருத்துச் சுதந்திரத்திற்காகச் செயற்படுவதிலும் மனித உரிமைகள் காப்பாளர்களை மையப்படுத்தியும் இன்ஃபோர்ம் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது. இலங்கையில் கொழும்பை தளமாகக் கொண்டு இன்ஃபோர்ம் இயங்கி வருவதோடு, உள்ளூர் செயற்பாட்டாளர்கள், குழுக்கள் வலைப்பின்னல்களுடனும், பிராந்திய (ஆசிய) சர்வதேச மனித உரிமைகள் வலைப்பின்னல்களுடனும் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றது.*

## சாராம்சம்

ஏப்பிரல் மாதம் அரசாங்கத்துக்கு, மனித உரிமைகள் பதிவு மற்றும் யுத்தக் குற்றங்களின் குற்றச்சாட்டுகள் மீது ஒரு சர்வதேச புலன்விசாரணைப் பொறிமுறையை ஸ்தாபிக்காமை என்பவற்றைக் கண்டித்து, நிறைவேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) தீர்மானத்தைக் கையாள வேண்டி ஏற்பட்டமையுடன் ஆரம்பித்தது. ஐ.நா மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தின் பின் பொதுமக்கள் ஆதரவைப் பயன்படுத்திக் கொள்ளும் இலக்கோடு அரசாங்கம், ஐ.நா மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்துக்கு அடுத்த நாள், இரண்டு மாகாணசபைத் தேர்தல்களை நடாத்துவதற்கு தீர்மானித்தது. எவ்வாறாயினும், அரசியல் ரீதியாகவும் மற்றும் பொருளாதார ரீதியாகவும் முக்கியமான மேல் மாகாணம் (தலைநகர் கொழும்பு உட்பட) மற்றும் கடந்த சில வருடங்களில் பாரிய உட்கட்டுமான செயல்திட்டங்கள் பலதைக் கண்ட ஆளும் கூட்டணியின் பலம் வாய்ந்த கோட்டையும் மற்றும் ஜனாதிபதி ராஜபக்ச மற்றும் அவரது குடும்பத்தினதும் சொந்த இடமானதுமான தென் மாகாணம் ஆகியவற்றில் அரசாங்கத்தின் பிடி தளர்ந்தது. வடக்கில், பயங்கரவாதத்துக்கு புத்துயிர் கொடுக்க முயற்சித்ததாக குற்றஞ்சாட்டி, மூன்று தமிழ் ஆண்களை, ஒரு துப்பாக்கிச் சூட்டு நடவடிக்கையில் கொன்றதாக அரசாங்கம் அறிவித்தது. இந்த ஆட்களுக்கான அரசாங்கத்தின் தேடுதல் நடவடிக்கையின் போது, 69 பேர்கள், அவர்களுள் அநேகமானவர்கள், தமிழர்கள், கைது செய்யப்பட்டனர். 24 பேர்கள் விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நிலையில், பலவந்தமான காணாமற்போதல்கள் தொடர்பான ஒரு முக்கிய ஆர்ப்பாட்டக்காரரான திருமதி. ஜெயகுமாரி உட்பட, 45 பேர்கள் மே, 4, 2014 திகதி வரை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்படுகிறது.

பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தான எதிர்க் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தாக்கப்பட்டமையோடு மாற்றுக் கருத்துக்கள் மீதான ஒடுக்குதல் ஏப்பிரலிலும் தொடர்ந்தது. பிரதான தமிழ்க் கட்சியான, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, மன்னார் கத்தோலிக்க ஆயர் மற்றும் பௌத்த பிக்குவான வணக்கத்துக்குரிய வட்டரக்கே விஜித தேரர் ஆகியோர் தொடர்ந்து இலக்கு வைக்கப்பட்டனர். இராணுவமும் மற்றும் அரசாங்கமும் வடக்கில் தமிழ் ஊடகவிய லாளர்களையும் மற்றும் தெற்கில் சிங்கள ஊடகவியலாளர்களையும் தாக்குவது தொடர்கையில், நுழைவிசைவு அனுமதியை (வீசா) ஒரு வருடத்துக்கு நீடிப்பதற்கு கோரும் பி.பி.சி செய்தியாளரின் வேண்டுகோள், அவ்விதமான கொள்கை நிலைப்பாடு காணப்படவில்லை எனக் காரணம் குறிப்பிடப்பட்டு மறுக்கப்பட்டது. யுத்தக் குற்றக் குற்றச்சாட்டுகளில் பொறுப்புக் கூறலுக்காக கோருவது மிரட்டல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் என்பவற்றை வரவழைப்பதாக அமைவது தொடர்ந்த அதேவேளை இராணுவமும் யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்களை மிரட்டி அச்சுறுத்துவதில் புதிய வடிவங்களைத் தேடி அவற்றை மேற்கொண்டது. அரச சார்பற்ற

ஸ்தாபனங்களை கண்காணிப்பதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்கும் புதிய சட்டங்களை வரைவதற்கான திட்டங்களை ஜனாதிபதி அறிவித்துள்ளதாக அறிவிக்கப்படுகையில், எந்த சான்றுகளுமின்றி, பயங்கரவாதத்துக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்து வெளிநாடுகளை தளமாகக் கொண்ட 16 தமிழ் ஸ்தாபனங்கள் மற்றும் 424 தமிழ் ஆட்களின் பெயர்களை அரசாங்கம் பகிரங்கப்படுத்தியது. அவற்றுள் சில ஸ்தாபனங்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு அனுதாபம் கொண்டவையாகக் காணப்பட்ட அதேவேளை. ஏனையவை அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளாலான யுத்தக் குற்ற குற்றச்சாட்டுகள் தொடர்பில் பொறுப்புகூறலைக் கோரி வருபவையாக இருந்தன.

அரசாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள். அரசியல்வாதிகள், ஆதரவாளர்கள் மற்றும் அரசாங்கத்தால் பின்புலமளிக்கப்படும் குழுக்கள் என்பன மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து சம்பவங்களின் பின்னணியில் இருந்ததாக காணப்படுகின்றது. பல சந்தர்ப்பங்களில், இந்த அரசாங்க அரசியல்வாதிகள் மற்றும் அவர்களது கூட்டாளிகள் ஆகியோர் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஒரு முன்னணி பௌத்த மதகுரு ஆகியோர் மதச் சுதந்திரத்துக்கும் மற்றும் ஒற்றுமைக்காகவும் ஆதரித்து வாதாடுகையில் அவர்களைத் தாக்கி மற்றும் அச்சுறுத்தும் போது பொலிஸ் அவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததுடன் நடவடிக்கை எடுப்பதற்கும் மறுத்தது. சில சந்தர்ப்பங்களில் சம்பவங்ளைக் கண்ணால் கண்ட சாட்சிகள், காணொலிகள் மற்றும் புகைப்படச் சான்றுகள் போன்ற போதுமான சான்றுகள், அவற்றுள் பெரும்பாலாவை பொதுத் தளங்களில் (public domain) காணப்படுகின்றவையாக இருந்த போதிலும், முன்னைய மாதங்கள் மற்றும் வருடங்களில் காணப்பட்டதைப் போலவே, புலன்விசாரணையை நடாத்துவதிலும் மற்றும் பொறுப்பானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதிலும் எந்த ஆர்வமோ அல்லது அவசரமோ இருந்ததாக காணப்படவேயில்லை.

## அ. யுத்தக் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலுக்காக ஆதரித்து வாதாடுவோர்களுக்கு அச்சுறுத்தல்கள்

### 1. தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்தான பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர் ஒருவர்

ஏப்பிரல் 10ஆம் திகதி, ஒரு ஊடக மாநாட்டில் பேசும்போது, அரசாங்கத்தின் கூட்டணிக் கட்சியான ஜாதிக்க ஹெல உறுமயவின் (JHU) ஊடகப் பேச்சாளரும் மற்றும் மேல் மாகாணசபை உறுப்பினருமான திரு. நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க வட மாகாணபை உறுப்பினர் திருமதி. ஆனந்தி சசிதரன், இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களான திரு.சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் திரு. எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர்களை உடனடியாகக் கைது செய்வதற்கு கோரினார். இந்த மூவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள். மார்ச் 2014 இல், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 25 ஆவது அமர்வில் அவர்கள் கலந்து கொண்டதோடு இலங்கையில் யுத்தக் குற்றங்களுக்காக ஒரு சர்வதேசப் புலன்விசாரணைக்காக பிரச்சாரம் செய்தமைக்காக ஜாதிக ஹெல உறுமய அவர்களைக் கைது செய்ய வேண்டியது.[1]



மார்ச் 26, 2014 அன்று ஐக்கிய நாடுகள் சபைக் கட்டிடத்தில் ஊடகங்களுக்கு த.தே.கூ பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசுகின்றனர்; திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் திரு.எம்.ஏ. சுமந்திரன் ஆகிய இருவரும் கூட்டத்தில் கலந்துகொண்டனர் (புகைப்படம்: எஸ்.தேசப்பிரிய)

### 2. ஆயர் இராயப்பு ஜோசெப்

பொது பல சேனா (பௌத்த இராணுவம் - ஒரு போராட்ட மற்றும் பௌத்த தீவிரவாதக் குழு) மன்னாரின் கத்தோலிக்க ஆயர் வணக்கத்துக்குரிய கலாநிதி. இராயப்பு ஜோசெப் அவர்களைக் கைது செய்வதற்கு அரசாங்கத்துக்கு சவால் விடுத்தது. ஆயர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு

[1] http://www.hirunews.lk/81026/jhu-says-3-tna-members-should-be-arrested (Last accessed 19th May 2014)

ஆதரவளித்தார் என அது குற்றஞ் சாட்டியது.[2] ஆனால், தமிழர் உரிமை தொடர்பாக ஐக்கிய இலங்கைக்குள் உள்ளக சுயநிர்ணயம் என்ற ஆயரின் உறுதியான நிலைப்பாடு, அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுலைப் புலிகளாலான யுத்தக் குற்ற குற்றச்சாட்டுகளைப் புலன்விசாரணை செய்வதற்கு ஒரு சர்வதேச விசாரணைக்கான அவரது கோரிக்கை மற்றும் அரசாங்கத்தின் மனித உரிமைகள் பதிவுகள் மீதான அவரது கடுமையான பகிரங்க விமர்சனம் என்பவை இதற்கான உண்மையான காரணமாக காணப்பட்டது,

### 3. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்துக்கமைய ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் (OHCHR) ஒழுங்கு செய்யப்படும் சர்வதேச விசாரணையுடன் ஒத்துழைப்போர்

“சிலோன் டுடே” செய்திப் பத்திரிகையின் ஒரு அறிக்கைப்படி, நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தை மீறியதாக சாட்சியம் சமர்ப்பிக்கப்படின், ஐ.நா மனித உரிமைகள் பேரவையால் ஸ்தாபிக்கப்படும் சர்வதேச விசாரணைப் பொறிமுறையின் முன் சாட்சியமளிப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமென ஊடக அமைச்சர், திரு. கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்[3]. நாட்டின் இறைமையை மீறுகின்ற ஒரு செயலாக அது அமையுமென்பதால், பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் பொறிமுறையின் முன் சாட்சியமளிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். “சர்வதேசக் குழு” முன் சாட்சியமளிப்பது தேசத்துரோகம் என்பதோடு “அரச இரகசியச் சட்டத்தின்” கீழ், அந்நபர்கள் சர்வதேச தொலைபேசி அழைப்புகளையும் மற்றும் காணொலிக் கலந்துரையாடல்ளை மேற்கொள்வதைத் தடுப்ப தற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு அத்தகைய தனிப்பட்டவர்களுக்கு எதிராக அரசாங்கம் சட்ட நடவடிக்கையையும் முன்னெடுக்குமெனவும் அவர் அறிவித்ததாக ஊடக அறிக்கைகளை மேற்கோள் காட்டி “சிலோன் டுடே” பத்திரிகையும் அறிவித்தது. தகவல் பரிமாற்றம் மீதான ஒரு அடக்குதல் தொடர்பில் கருத்து தெரிவிப்பதிலிருந்து அமைச்சர் ரம்புக்வெல தவிர்த்துக் கொண்டார்.

## ஆ. பேச்சு சுதந்திரம் மீதான தாக்குதல்களும் மட்டுப்பாடுகளும்

### 4. தமிழ் செய்தித்தாள்கள்: பிரேரிக்கப்பட்ட புதிய தணிக்கை

இலங்கைச் செய்தித்தளொன்றுக்கு வழங்கிய ஒரு நேர்காணலில் கலாநிதி. ரோஹான் குணரத்ன, *“மோசமான பகுதி முடிந்துவிட்டது, ஆனாலும் எஞ்சியுள்ளவர்கள் மீள*

[2] http://www.island.lk/index.php?page_cat=article-details&page=article-details&code_title=102041 (Last accessed 19th May 2014)
[3] http://www.ceylontoday.lk/51-61100-news-detail-govt-warns-against-testifying-before-unhrc-inquiry.html (Last accessed 19th May 2014)

*ஒன்றிணைவதற்கு முனைவதும் மற்றும் த.வி.பு பதிலாள்களின் நடவடிக்கைகளும் கூர்மையாக அவதானிக்கப்படல் வேண்டும். பிரச்சாரங்கள் பிரசுரிக்கப்படுவதிலிருந்து தடுப்பதற்கு, தவறான தகவல் மற்றும் பிழையான தகவல்ளைப் பிரசுரித்தமைக்காக தமிழ்ப் பத்திரிகையாசிரியர்கள் பொறுப்புக்கூற வைக்கப்படல் வேண்டும்"* [4]*, என்று தெரிவித்தார்.*

திரு. குணரத்ன, சிங்கப்பூரிலுள்ள நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தில் அரசியல் வன்முறை மற்றும் பயங்கரவாத ஆராய்ச்சி (ICPVTR) மையத்தின் தலைவராவர் என்பதுடன் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு செயற்பாடுகளில் அடிக்கடி சம்பந்தப்படுகின்ற ஓர் வளப் பகிர்வாளராவர். அவரது கருத்துக்கள், தமிழ் புலம்பெயர் ஸ்தாபனங்களின் பட்டியலிடல் மற்றும் இலங்கையில் த.வி.பு இன் நடவடிக்கைகளுக்கு புத்துயிர் அளிக்கும் முயற்சி தொடர்பான குற்றச்சாட்டுக்கள் ஆகியவற்றின் பின்னணியில் மேற்கொள்ளப்பட்டவையாகும். யுத்தத்தின் போதும் மற்றும் பின்னரும், அநேகம் பயங்கரவாதத்துக்கு எதிரான முன்னெடுப்புகளின் போது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் அரசாங்கத் துஷ்பிரயோகங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை தமிழ் ஊடகங்கள் அநேகம் வெளிப்படுத்துவதன் ஒரு சூழ்நிலையில் இவை மேற்கொள்ளப்பட்டவையாக இருக்கலாம். பல்வேறு தாக்குதல்களுக்கு மத்தியிலும், அவற்றுள் சில இராணுவத்தை விமர்சிக்கும் செய்திகள் மற்றும் கண்ணோட்டங்களைத் தொடர்ந்தும் பிரசுரிப்பதால், இது தமிழ் ஊடகங்களுக்கான ஒரு அச்சுறுத்தலாகவும் மற்றும் அவர்களை முற்றிலுமான சரணாகதி நோக்கி பணிய வைக்க முயல்வதாகவும் தோன்றுகிறது.

## 5. வடக்கிலுள்ள தமிழ் செய்திப் பத்திரிகைகள்: இராணுவம் செய்திகளைக் கட்டளையிடுகிறது

இருபதுக்கிருபது (T20) உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை கிரிக்கெட் அணியின் வெற்றியை, அவர்களது பிரதான செய்தியாகப் பிரசுரிக்கும்படி வடக்கிலுள்ள செய்திப் பத்திரிகைகளை இராணுவம் கேட்டுக் கொண்டது. ஏப்பிரல் 7 ஆம் திகதி ஓர் இராணுவ அதிகாரி, பிரதேசத்திலுள்ள செய்தித்தாள் அலுவலகங்களுக்கு தொலைபேசியில் அழைத்து, பத்திரிகைகளின் பிரதான செய்தியாக இவ்விடயத்தைப் பிரசுரிப்பதற்கு கேட்டுக் கொண்டார்.[5] இது பத்திரிகையாசிரியர் சுதந்திரத்திலான ஒரு தெளிவான தலையீடு என்பதோடு பிரதேசத்திலான பலமான இராணுவமயப்படுத்தல் மற்றும் பிரதேசத்தில் ஊடகங்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களின் வரலாற்றின் பின்னணியில் அமைந்ததான ஒரு வடிவிலான மிரட்டுதலாகவும் நோக்கப்பட முடியும்.

[4] http://www.nation.lk/edition/interview/item/28174-ltte-overseas-network-should-be-dismantled-prof-gunaratna.html (Last accessed 19th May 2014)
[5] https://www.srilankamirror.com/news/14339-north-newspapers-asked-to-take-cricket-win-as-lead-news (Last accessed 19th May 2014)

## 6. திரு. சிவஞானம் செல்வதீபன்: ஊடகவியலாளர் தாக்கப்பட்டார்



வைத்தியசாலையில் ஊடகவியலாளர் சிவஞானம் செல்வதீபன் (photo: ICET)

ஒரு சுயாதீன தமிழ் ஊடகவியலாளர், திரு. சிவஞானம் செல்வதீபன், யாழ்ப்பாண மாவட்டத்தின் வடக்கிலுள்ள, வடமராச்சிப் பகுதியில் ஏப்பிரல் 14 ஆம் திகதியன்று தாக்கப் பட்டார். அவர் தனது வீட்டுக்கு சென்று கொண்டிருக்கும் வழியில் ஒரு மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்த இருவர் அவரைத் தாக்கினர். அவர் கொழும்பில் பிரசுரமாகும் வீரகேசரி மற்றும் தினக்குரல் பத்திரிகைகளுக்கான ஒரு நிருபராவர். அவர் கடுமையாக்க் காயமடைந்து வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதுடன் ஒரு பொலிஸ் முறைப்பாடும் பதியப் பட்டது.[6]

## 7. திரு. எஸ்.வி.சிவகரன் மற்றும் 'புதியவன்' செய்திப்பத்திரிகை: மரணம் உட்பட்ட அச்சுறுத்தல்கள்

ஆளுங் கூட்டணியான ஐ.ம.சு.கூ மாகாணசபை உறுப்பினரொருவர் தலைமையிலான ஒரு குழு, ஏப்பிரல் 10 ஆம் திகதி, மன்னாரிலுள்ள 'புதியவன்' செய்திப் பத்திரிகை அலுவலகத்தில் நுழைந்து, அதன் ஆசிரியர் திரு.எஸ்.வி.சிவகரனுக்கு மரண அச்சுறுத்தலை விடுத்தது. பத்திரிகை அலுவலகம் மன்னார் பிரதான வீதியில், சின்னக்கடை எனுமிடத்தில் அமைந்துள்ளது. திரு.சிவகரன், எதிரணித் தமிழ் அரசியல் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி இளைஞர் அணியின் தலைவராவர். ஊடகங்களுக்கான ஆசிரியரின் அறிக்கைப்படி, செய்தித் தாளின் விநியோகத்தை தடை செய்து அலுவலகத்துக்கு தீ வைக்கப்போவதாகவும்

[6] http://colombogazette.com/2014/04/15/tamil-journalist-attacked-in-jaffna/ (Last accessed 19th May 2014)

அக்குழு அச்சுறுத்தியது. புதியவன் வட மாகாணத்தின் மன்னாரில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு செய்திப் பத்திரிகையாகும்.[7]

## 8. திரு. சமன் வக்கிரராச்சி: பத்திரிகையாசிரியர் பொலிசாரினால் கேள்விக்கு உட்படுத்தப்பட்டார்

*லக்பிம* செய்திப் பத்திரிகையின் பிரதான ஆசிரியர் திரு. சமன் வக்கிரராச்சி, ஜனாதிபதியின் சகோதரரும் மற்றும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளருமான திரு.கோத்தபாயா ராஜபக்சவின் மனைவி, திருமதி. அனோமா ராஜபக்சவின் ஒரு புகைப்படம் தொடர்பிலான ஒரு தலைப்பை வெளியிட்டமைக்காக, ஏப்பிரல் 9, 2014 அன்று குற்றவியல் புலன்விசாரணைப் பிரிவினரால் (CID) அழைக்கப்பட்டு ஒரு நீண்ட விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் விடுத்த ஒரு அறிக்கை, *"நாட்டின் இன்றைய நிலையின் ஒரு எடுத்துக்காட்டு இதுவாகும். ஒரு செய்தித்தாளின் ஆசிரியர் ஒரு அற்ப விடயத்துக்காக குற்றவியல் புலன்விசாரணைப் பிரிவின் முன் அழைக்கப்படுகின்ற அதேவேளை, அடிப்படை உரிமைகளின் தீவிரமான மீறல்கள் மற்றும் சட்டவாட்சியின் மீறல்களாக பொதுமக்கள் மீதான தாக்குதல் என்பன அதிகாரத்திலிருப்போரிடமிருந்து எந்தவிதமான கருத்துக்களுமின்றி கவனம் செலுத்தப்படாதுள்ளன. எங்களது பார்வையில் கருத்து தெரிவிக்கும் சுதந்திரத்தை அடக்குவதற்கும் மற்றும் ஊடகங்களின் குரல்வளையை பிடிப்பதற்கு மிரட்டுகின்ற மற்றொரு சம்பவமே இதுவென்பதால் இந்த நடவடிக்கையை நாம் கண்டிக்கிறோம்", எனத் தெரிவித்தது.*[8]




லக்பிம பிரதான ஆசிரியர், சமன் வக்கிரராச்சி பதவி விலகுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார் (screen shot, BBC Sandeshaya video)

[7] http://www.tamilnet.com/art.html?catid=13&artid=37163 / http://goo.gl/UMyG30 (Last accessed 19th May 2014)
[8] http://www.ft.lk/2014/04/26/lawyers-for-democracy-condemn-the-harassment-of-lakbima-editor/ (Last accessed 19th May 2014)

## 9. திரு. சுஜித் பிரசங்க, பத்திரிகை உதவி ஆசிரியர்: அரசியல் காரணங்களுக்காக பதவி நீக்கப்பட்டார்

பாதுகாப்புச் செயலாளர் (ஜனாதிபதியின் சகோதரரும் கூட) திரு. கோத்தாபாய ராஜபக்சவின் மனைவியின் ஒரு புகைப்படத்துக்கு ஒரு தலைப்பு எழுதியமைக்காக, "லக்பிம" பத்திரிகை முகாமைத்துவம், பத்திரிகையின் உதவி ஆசிரியர், திரு. சுஜித் பிரசங்கவை பதவிநீக்கம் செய்தது. புகைப்படம், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் "சேவா வனிதா" பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட புது வருட சந்தையில், ஒரு விற்பனைச் சாவடியிலிருந்து திருமதி. ராஜபக்ச சில பொருட்கள் கொள்வனவு செய்வதைக் காட்டியது. ஏப்பிரல் 7 மற்றும் 9 ஆகிய இரு திகதிகளிலும் பகிரங்க மன்னிப்பைக் கோருவதற்கு பத்திரிகை நிர்ப்பந்திக்கப்பட்டது.[9] இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கத்தின் (SLWJA) படி, அது ஒரு மறைமுகமான கேலிப்படத் தலைப்பாகும்: *"படத்தின் தலைப்பு "போலியான பணமில்லை, இல்லையா?" எனும் அர்த்தம் தரும் வகையில் சிங்கள மொழியிலமைந்த வாசகமாக இருந்தது."*[10] *'அதிகாரத்திலிருப்பவர்கள் மீது தெரிவிக்கப்பட்ட கேலி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் விசாரணை செய்யப்படுவதற்கு தகுதியானது என பதவியிலிருக்கும் நிர்வாகம் நம்பியது'* குறித்து இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம், அதன் கரிசனைகளை வெளிப்படுத்தியது.

## 10. ஊடகவியலாளர்கள்: தாக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்டனர்

ஹம்பாந்தோட்டை, மஹகம்புர துறைமுகத்துக்கு (ஜனாதிபதி ராஜபக்சவின் சொந்த இடமும், சிங்களப் பெரும்பான்மை தென்மாகாணத்தில் புதிதாகக் கட்டப்பட்ட துறைமுகம்) எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒரு விஜயத்தில் செய்தி சேகரிப்பதற்காகச் சென்றிருந்த ஊடகவியலாளர்கள் பிரதேசத்தின் நகர பிதாவான ஒரு துப்பாக்கி ஏந்திய அரசாங்க அரசியல்வாதி உட்பட்ட ஒரு கலகக் குழுவால் அச்சுறுத்தப்பட்டும் மற்றும் முட்டைகள் வீசப்பட்டு விரட்டியடிக்கப்பட்டனர்.[11] கலகக் குழு அதிகரித்தளவில் வன்முறை கொண்டவர்களாக மாறியதையடுத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பரிசோதனை விஜயத்தைக் கைவிட்டனர். காடையர்கள் தாக்குகின்றதை, மிரட்டுவதை, அச்சுறுத்துகின்றதை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை

---

[9] http://www.lankaviews.com/en/index.php?option=com_content&view=article&id=11558:on-gotas-orders-lakbima-sub-editor-removed-chief-editor-summoned-by-cid&catid=150:lead-news&Itemid=113 (Last accessed 19th May 2014)

[10] http://lankanewsweb.net/news/7246-the-cid-questioning-of-lakbima-editor-saman-wagarachchi (Last accessed 19th May 2014)

[11] http://www.sundaytimes.lk/top-story/48925.html (Last accessed 19th May 2014)

விரட்டியடிப்பதைக் காண்பிக்கும் காணொலிகள் அதே போன்று புகைப்படங்கள் என்பன ஊடகங்களினால் பகிரங்கப்படுத்தப்பட்டன. [12]

## 11. திரு. சார்ள்ஸ் ஹவிலாண்ட், பி.பி.சி நிருபர்: நுழைவிசைவு (வீசா) நீடித்தல் மறுக்கப்பட்டது

கொழும்பிலுள்ள பி.பி.சி நிருபர் திரு. சார்ள்ஸ் ஹவிலாண்ட் அவர்களின் வேண்டுகோளின் படி, அரசாங்கம் தொழில் பார்ப்பதற்கான அவரது நுழைவிசைவை ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்கு மறுத்தது. இலங்கையிலான அவரது பணிகளை முடித்துக் கொள்வதற்காக ஆரம்பத்தில் ஒரு சில நாட்களுக்கு நுழைவிசைவு நீடிப்பு வழங்கப்பட்டது. கொழும்பைத் தளமாகக் கொண்ட சில சிரேஷ்ட வெளிநாட்டு ஊடகவியலாளர்களின் தலையீட்டின் பின் அவருக்கு மூன்று மாத நுழைவிசைவு நீடிப்பு வழங்கப்பட்டது. சார்ள்ஸ் ஹவிலாண்ட், 2009 ஏப்பிரலில் இருந்து இலங்கையில் இருக்கின்றார், என்பதுடன் நாட்டில் மனித உரிமைகள் மற்றும் யுத்தத்திற்குப் பிந்திய விடயங்கள் என்பவை மீது அதிகளவிற்கு அறிக்கையிட்டுள்ளார்.[13] ஊடக அமைச்சுக்கான செயலாளர் கலாநிதி. சரித்த ஹேரத், *"திரு. ஹவிலாண்ட் அவர்களின் தற்போதைய நிலை, வெளிநாட்டுச் செய்தி நிருபர் இலங்கையில் அதிக பட்சமாக ஐந்து வருடங்களுக்கே தங்க முடியும் எனும் நுழைவிசைவுக் கொள்கையின் பயனானது"*, எனக் கூறியதாக ஊடகங்களால் தெரிவிக்கப்பட்டது. ஆனாலும், இந்த ஐந்து வருடக் கொள்கை எங்கே மற்றும் எப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டது மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்டது என்பது பற்றி அவரால் விளக்குவதற்கு இயலவில்லை. *"....ஊடக அமைச்சில் இந்தக் கொள்கை உள்ள போதிலும், அது வெளி விவகார அமைச்சினால் அமுல்படுத்தப்படுவதால், தான் அது குறித்து வெளி விவகார அமைச்சுடன் சரிபார்க்க வேண்டுமென"*, திரு.ஹேரத் கூறினார். வெளி விவகார அமைச்சுக்கான பேச்சாளரிடம் வினவிய போது, *" எனக்கு அது பற்றி தெரியாது. ஊடக அமைச்சின் பிரகாரம் அப்படியொன்று உள்ளது என நான் நினைக்கிறேன். நீங்கள் அதனை அந்த அமைச்சின் செயலாளருடன் சரி பார்த்துக் கொள்ள வேண்டும். அத்தகையதொரு கொள்கை உள்ளது என நான் நினைக்கிறேன்"*,[14] என அவர் பதிலளித்தார். நேரடியான பதில்களை வழங்க மறுக்கின்றமை, மற்றைய அமைச்சுகள் மீது பொறுப்புகளை சுமத்துகின்றமை மற்றும் இல்லாததாக உள்ள ஒரு சார்த்துரைக்கப்படும் கொள்கை பற்றிய விபரங்களை வெளியிட மறுக்கின்றமை என்பன, அரசாங்கம் மீதான திரு. ஹவிலாண்டின் விமர்சனம் காரணமான அரசியல் தீர்மானமே பி.பி.சி நிருபரின் நுழைவிசைவு நீடிப்பு வேண்டுகோள் மறுக்கப்

[12] https://www.youtube.com/watch?v=d4Hacx6mXT0 (Last accessed 19th May 2014)
[13] http://colombogazette.com/2014/04/19/bbc-correspondent-refused-a-visa/ (Last accessed 19th May 2014)
[14] http://www.sundaytimes.lk/140420/news/bbcs-haviland-has-to-go-says-govt-93255.html (Last accessed 19th May 2014)

பட்டதுக்கான காரணம் எனக் காட்டுவதுடன், இது ஊடக சுதந்திரத்துக்கான ஒரு மோசமான முன்னுதாரணம் என்பதையும் சுட்டிக் காட்டுகிறது. .

### 12. வணக்கத்துக்குரிய. வட்டரக்கே விஜித தேரர் மற்றும் ஏனையவர்கள்: ஊடக சந்திப்பு தாக்கப்பட்டது

ஏப்பிரல் 9 ஆம் திகதியன்று, சிரேஷ்ட பௌத்த பிக்குவான வணக்கத்துக்குரிய வட்டரக்கே விஜித தேரோ அவர்களின் தலைமையிலான "ஜாதிக்க பல சேனாவினால்" ஒழுங்கு செய்யப்பட்ட பூர்வாங்க ஊடாக சந்திப்பு, பொது பல சேனாவினால் (பௌத்த இராணுவம் - ஒரு போராட்ட மற்றும் தீவிரவாத பௌத்த குழு) தலைமை தாங்கப்பட்ட ஒரு குழுவினால் குழப்பப்பட்டது.[15] மத ரீதியான சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மற்றும் மதங்களுக்கிடையில் ஒற்றுமையை ஆதரித்துப் பேசுவதற்காகவும் பொது பல சேனாவினால் விஜித தேரோ தாக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டார்.[16] வணக்கத்துக்குரிய விஜித தேரரை அச்சுறுத்துகின்ற, மிரட்டுகின்ற மற்றும் அநேகம் அவரைத் தாக்குகின்றதும் மற்றும் முஸ்லிம் மதகுருமார்களை வாயை மூடுமாறு அதட்டுகின்ற பொது பல சேனாப் பிக்குகளின் அடாவடி நடவடிக்கைகளின் காணொலிக் காட்சிகளை பல தொலைக்காட்சி நிலையங்களுமே ஒளி பரப்பின.[17] ஊடக சந்திப்பில் உட்புகுந்து குழப்பம் விளைவித்தும் மற்றும் விஜித தேரோ மற்றும் பிரசன்னமாகியிருந்த முஸ்லிம் குருமார்களை அச்சுறுத்தியும் மற்றும் தூற்றியதையும் தடுப்பதற்கு அங்கு பிரசன்னமாகியிருந்த பொலிஸ் அதிகாரிகள் முயற்சிக்கவில்லை.

## இ. ஒன்றிணையும் சுதந்திரம் மீதான அச்சுறுத்தல்களும் மட்டுப்பாடுகளும்

### 13. அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் : அரச சார்பற்ற ஸ்தாபனங்களைக் கண்காணிப்பதற்கு புதிய சட்டங்கள் மூலமாக பழி தீர்க்கப்படும் அச்சங்கள்

ஜனாதிபதி, ஏப்பிரல் 24 ஆம் திகதியன்று பத்திரிகையாசிரியர்களுடனான சந்திப்பில், அரச சார்பற்ற ஸ்தாபனங்களால் பெற்றுக் கொள்ளப்படும் நிதிகளைக் கண்காணிப்பதற்கு புதிய சட்டங்களை உருவாக்குவதற்கான திட்டங்களை வெளியிட்டதாக அறிவிக்கப்படுகிறது. உத்தேசிக்கப்பட்ட சட்டம் அரச சார்பற்ற ஸ்தாபனங்களைப் பழி தீர்ப்பதற்கோ அல்லது அவற்றின் ஜனநாயகச் செயற்பாடுகளை ஒடுக்குவதற்கோ இட்டுச் செல்லுதல் கூடாது. எவ்வாறாயினும், வாதத்துக்குரிய விடயமே அதுவாகத்தான் உள்ளது. அரசாங்கத்தின் கடந்த கால பதிவுகளைக் கவனத்தில் கொள்கையில், மிகவும் நேர்மையான அரச சார்பற்ற ஸ்தாபன செயற்பாட்டாளர்கள் கூட அரசாங்கத்தின் உள்நோக்கம் பற்றி வேறு கருத்துக்களையே

---

[15] http://colombogazette.com/2014/04/09/bbs-abuse-monk-and-muslim-cleric/ (Last accessed 19th May 2014)
[16] http://groundviews.org/2013/10/09/buddhist-monk-attacked-by-bodu-bala-sena-and-police-inaction/
[17] https://www.youtube.com/watch?v=pcbhAGG4VCM (Minutes 1.56 onwards - last accessed 19th May 2014)

கொண்டிருப்பார்கள். எங்களால் ஒன்றும் செய்வதற்கு முடியாது, ஆனால் அந்த உணர்வுகளைப் பகிர்ந்து கொள்கிறோம் எனத் தெரிவித்தது, சிலோன் டுடேயின் ஒரு ஆசிரியர் தலையங்கம்.[18]

## 14. புலம்பெயர் தமிழ் ஸ்தாபனங்களும் தனிப்பட்டவர்களும் மற்றும் அவர்களைத் தொடர்புகொள்ளும் இலங்கையர்களும்

ஏப்பிரல் 4, 2014 அன்று, வெளி விவகார அமைச்சர், ஜி.எல். பீரிஸ் பாதுகாப்பு அமைச்சு செயலாளரினால் மார்ச் 20 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்ட, 15 வெளிநாட்டு தமிழ் ஸ்தாபனங்கள் மற்றும் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்ட த.வி.பு என்பவற்றைப் பட்டியல் படுத்திய ஒரு கட்டளையை பகிரங்கப்படுத்தினார்.[19] அது இந்த 16 ஸ்தாபனங்களின் சொத்துக்கள் மற்றும் நிதி வளங்கள் என்பவற்றை முடக்கும் நோக்கம் கொண்டதாக காணப்பட்டது. மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் படி, “இலங்கை அரசாங்கத்தின் தீர்மானம்.......மிகவும் விரிந்தது, அது நாட்டின் தமிழ்ச் சிறுபான்மையின் அமைதியான செயற் பாடுகள் அனைத்தையும் மட்டுப்படுத்தும் இலக்கில் அமைந்தவையாகத் தோன்றுகின்றது.[20]” மேலும், குறித்த குழுக்களின் சட்ட விரோத நடவடிக்கைகளுக்கான சான்றுகளை அரசாங்கம் வழங்க வேண்டுமென்பதோடு தனிப்பட்டவர்களை பட்டியலிருந்து நீக்கவேண்டும்” எனவும் தெரிவித்தது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானம் 1373 (2001) இலிருந்து உருவாகிய, 2012 இன் ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதி இல.1 [21] இலங்கையில், ஐக்கிய அமெரிக்கா மீதான 2011, செப்டெம்பர் 11 தாக்குதல்களை அடுத்து நிறைவேற்றப்பட்டதுடன், “பயங்கரவாத நடவடிக்கைகளைப் புரிகின்ற அல்லது புரிவதற்கு முயற்சிக்கின்ற அல்லது பங்குபற்றுகின்ற அல்லது பயங்கரவாத செயல்களுக்கு அனுசரனை அளிக்கின்றவர்கள் எவரினதும்” சொத்துக்கள் மற்றும் பொருட்களை முடக்குவதற்கு நாடுகளைத் தேவைப்படுத்துகிறது.

பட்டியலிடப்பட்ட ஸ்தாபனங்களில் ஒன்றான, உலகத் தமிழ் அமைப்பின் கருத்துப்படி (GTF), “பதினாறு தமிழ் புலம்பெயரமைப்பு ஸ்தாபனங்கள் மற்றும் உலகத் தமிழ் அமைப்பின் தலைவர் வணக்கத்துக்குரிய. கலாநிதி. எஸ்.ஜே. இம்மானுவெல் உட்பட, நான்கு முக்கிய புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்களை, ‘வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புகளாக’ தடைசெய்வதற்கான இலங்கை அரசாங்கத்தின் தீர்மானம், இலங்கையின் ஆயுத மோதல்களின் போது புரியப்பட்ட

---

[18] http://www.ceylontoday.lk/52-62465-news-detail-new-laws-against-ngos-should-not-be-a-witch-hunt.html (Last accessed 19th May 2014)

[19] http://www.hrw.org/news/2014/04/07/sri-lanka-asset-freeze-threatens-peaceful-dissent and for the actual gazette, see http://documents.gov.lk/Extgzt/2014/PDF/Mar/1854_41/1854_41%20(E).pdf (Last accessed 19th May 2014)

[20] http://www.hrw.org/news/2014/04/07/sri-lanka-asset-freeze-threatens-peaceful-dissent (Last accessed 19th May 2014)

[21] http://fiusrilanka.gov.lk/docs/UNSCR/Regulations/1758/1758_19_(E).pdf (Last accessed 19th May 2014)

யுத்தக் குற்ற குற்றச்சாட்டுக்கள் மற்றும் தொடர்ந்து புரியப்படும் மனித உரிமைகள் துஷ்பியோகங்கள் என்பவற்றுக்காக உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலைக் கோருவோர்களை மிரட்டி மௌனிக்க வைப்பதற்கான ஒரு முயற்சியாகும்."[22]

## ஈ. பல்கலைக் கழக மாணவ செயற்பாட்டாளர்கள் மீதான அடக்குமுறை

### 15. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள்: இராணுவத்தாலான மிரட்டுதல்

ஏப்பிரல் 25 அன்று அறிக்கையொன்றை வெளியிட்ட யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்கள் ஒன்றியம், ஆண் மாணவர் விடுதிகளில் இராணுவம் விரிவான தேடுதல் நடாத்துவதாகக் குறிப்பிட்டது. "பாதுகாப்புப் படைகள், பயங்கரவாதம் என்ற ஒரு போர்வையின் கீழ், கருத்து தெரிவிக்கும் சுதந்திரத்துக்கான எங்களது அனைத்து உரிமைகளையும் ஒடுக்குகிறது, எந்தவொரு தெளிவான காரணமுமின்றி உள் நுழைந்து தேடுதல் நடாத்துவது மாணவர்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது"[23]. இந்தத் தேடுதல், கடந்த காலங்களில் அரசாங்கத்தை விமர்சித்தும் மற்றும் சவாலுக்கு உட்படுத்திய பல்கலைக் கழக மாணவர்களை மிரட்டுவதை நோக்காகக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

## உ. மதச் சுதந்திரத்தை ஊக்குவிக்கும் ஒரு மனித உரிமைப் பாதுகாவலருக்கான அச்சுறுத்தல்கள்

### 16. வணக்கத்துக்குரிய. வட்டரக்கே விஜித தேரோ: கூட்டமொன்றில் கலந்து கொள்வதைத் தடுக்கும் முயற்சிகள்

ஏப்பிரல் 22ஆம் திகதியன்று பொது பல சேனா வணக்கத்திற்குரிய விஜித தேரருக்கு எதிராக மஹியங்கனை பிரதேச சபைக்கு வெளியே மற்றொரு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தது. விஜித தேரோ ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து பிரதேச சபைக்கு (உள்ளூராட்சி மன்ற அமைப்பு) மக்களால் தெரிவு செய்யப்பட்டவொரு உறுப்பினராவர். ஆர்ப்பாட்டக்காரர்கள் பிக்குவைத் தாக்கலாம் என்ற அச்சத்தையடுத்து பிரதேச சபைக் கட்டிடத்தினுள் விஜித தேரோவுக்கு பொலிஸ் பாதுகாப்பு அளிக்க வேண்டி ஏற்பட்டது.[24] பொலிஸாரினால் பாதுகாப்பு அளிக்கப்பட்ட நிலையில், அச்சத்தில் விஜித தேரோ

---

[22] http://www.srilankabrief.org/2014/04/banning-tamil-diaspora-groups-in-sri.html#more (Last accessed 19th May 2014)
[23] See http://globaltamilnews.net/GTMNEditorial/tabid/71/articleType/ArticleView/articleId/106072/language/ta-IN/article.aspx for statement in Tamil and http://www.eyesrilanka.com/2014/04/26/jaffna-uni-students-union-condemns-search-of-residence/ for article quoting the statement in English (Last accessed 19th May 2014)
[24] http://colombogazette.com/2014/04/22/massive-demo-against-vijitha-thero/ (Last accessed 19th May 2014)

ஓடுகின்றதைக் காண்பிக்கும் ஒரு யுடியூப் காணொலி (YouTube video) இணையத் தளத்தில் காணப்படக்கூடியதாக உள்ளது.[25]



*பொது பல சேனாக் கும்பல் அவருக்கு எதிராக கோஷமிடுவதால் வட்டரக்கே விஜித தேரோ உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஓடுகிறார் (ஏப்பிரல், 9, 2014) – (screen shot. you tube video)*

## 17. வணக்கத்துக்குரிய வட்டரக்கே விஜித தேரோ: தேடப்படுதல்

ஏப்பிரல் 24ஆம் திகதியன்று, பொது பல சேனாவிலிருந்தான சில பௌத்த பிக்குகள் அடங்கிய ஒரு காடையர் குழு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் அலுவலகத்தினுள் பலவந்தமாக உள்நுழைந்து விஜித தேரோ அங்கு ஒளிந்து இருக்கிறாரா எனக் கண்டறிவதற்கு ஒவ்வொரு அறை அறையாகத் தேடினர். இந்தத் தேடுதல் நேரத்தின் போது அமைச்சர், அவரொரு முஸ்லிம், அமைச்சில் இருக்கவில்லை. அமைச்சின் அதிகாரிகளும் மற்றும் பொலிசாரும் விஜித தேரோ கட்டிடத்தில் இல்லையென உறுதியளித்த பின்னரே பொது பல சேனாவின் பிக்குகள் கட்டிடத்தை விட்டகன்றனர்.[26]

[25] https://www.youtube.com/watch?v=MHimUKSFJ2M See seconds 35 to 45 (Last accessed 19th May 2014)
[26] http://colombogazette.com/2014/04/23/bbs-mob-storms-rishads-ministry/ (Last accessed 19th May 2014)

## ஊ. மனித உரிமைப் பாதுகாவலர் சிறைக் கைதிகளிடம் விஜயம் செய்வதற்கு கட்டுப்பாடுகள்

### 18. மன்னார் ஆயர்: மத ஆராதனையை நடாத்துவதற்கும் மற்றும் தமிழ் சிறைக் கைதிகளைச் சந்திப்பதற்கும் மறுக்கப்பட்டார்

அநுராதபுரத்திலுள்ள கத்தோலிக்க ஆயரின் கூற்றுப்படி, மன்னார் ஆயரின் விஜயம் குறித்து, சிறைச்சாலைகள் அமைச்சர் திரு. சந்திரசிறி கஜதீர அறிந்திருந்தும் கூட, "கொழும்பிலுள்ள உயர் அதிகாரிகளினால்" அநுராதபுரத்திலுள்ள தமிழ்க் கைதிகளைச் சந்திப்பதற்கும் மற்றும் உயிர்த்த ஞாயிறு ஆராதனையை நடாத்துவதிலிருந்தும் மன்னாரின் கத்தோலிக்க ஆயர் தடுக்கப்பட்டார்.[27] நீண்ட நேரத்துக்கு ஆயருடன் பேசக்கூடாதெனவும் மற்றும் அவரிடம் எதனையும் எழுத்தில் அளிக்கக்கூடாதெனவும் தமிழ் சிறைக்கைதிகளுக்கு சிறை அதிகாரிகள் ஏற்கனவே அறிவுறுத்தல்கள் வழங்கியிருந்ததாகவும் அநுராதபுர ஆயர் மேலும் குறிப்பிட்டார்.

தமிழ்நெற் இணையத் தளத்தின் கூற்றுப்படி, விஜயத்துக்கான அனுமதி கொழும்பில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை சீர்திருத்தங்கள் அமைச்சர் திரு. சந்திரசிறி கஜதீர அவர்களிடமிருந்து முன்னமே பெறப்பட்டிருந்த போதிலும், ஏப்பிரல் 20 ஆம் திகதியன்று, பாதுகாப்பு அமைச்சிடமிருந்தான ஒரு கட்டளைப்படி, கடைசி நிமிடத்தில் ஆயரின் விஜயம் தடுக்கப்பட்டது.[28] சிறைச்சாலையிலுள்ள சுமார் 60 அரசியல் கைதிகளிடம் ஆயர் விஜயம் செய்து உயிர்த்த ஞாயிறன்று ஒரு நம்பிக்கைச் செய்தியையும் மற்றும் சில அடிப்படை உதவிகளையும் வழங்குவதற்கு ஏற்பாடாகியிருந்தது.[29] மன்னார் ஆயர், வடக்கின் தமிழ் சமூகத்தினுள் ஒரு முக்கியமான மனித உரிமைகள் பாதுகாவலர் என்பதோடு, தமிழ் அரசியல் கைதிகளிடம் அவர் கிரமமாக விஜயம் செய்வதோடு, நம்பகமான சாட்சியங்களோடு அவர்கள் குற்றம் சுமத்தப்படவில்லையாயின், அவர்களது விரைவான விடுதலைக்கு கோருகின்ற ஒரு குரலுமாக இருந்தார். அவர் அரசாங்க அமைச்சர்கள் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆகியோரிடம் அவர் பிரதிநிதித்துவமும் செய்திருக்கிறார். "இன்று இலங்கை நாட்டில் கல்நெஞ்சம் கொண்ட ஆட்களும் மற்றும் அதிகாரிகளும் உள்ளனர். அதனாலேயே தமிழ் மற்றும் சிங்கள மக்களிடையேயான நல்லிணக்கம் இன்னமும் தொலைவிலேயே இருக்க காணப்படுகின்றது. நல்லிணக்கம் நோக்கிய ஒரு பாதையில் நாடு பயணிக்க வேண்டுமாயின், இந்தப் பிரதிகிருதிகள் தங்களது உளப் பாங்குகளை ஒரு நேர்மறையான திசை நோக்கி வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும், தங்களது தீய செயல்களைக்

[27] http://www.srilankabrief.org/2014/05/sri-lanka-there-are-reasons-to-beleive.html (Last accessed 19th May 2014)
[28] http://www.tamilnet.com/art.html?catid=13&artid=37183 (Last accessed 19th May 2014)
[29] ibid

கைவிட்டு மனிதப் பிறவிகளை மதிப்பதற்கு தொடங்குதல் வேண்டும்", என்று மன்னார் ஆயர் கூறினார்.[30]

## ஏ. எதிரணி அரசியல் கட்சிகள் மீதான அடக்குமுறை

### 19. எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள்: ஒரு உண்மை கண்டறியும் விஜயத்தில் தாக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டு மற்றும் தடுக்கப்பட்டனர்

ஹம்பாந்தோட்டை, மஹகம்புர துறைமுகத்துக்கு (ஜனாதிபதி ராஜபக்சவின் சொந்த இடமும், சிங்களப் பெரும்பான்மை தென்மாகாணத்தில் புதிதாகக் கட்டப்பட்ட துறைமுகம்) எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒரு விஜயத்தில் செய்தி சேகரிப்பதற்காகச் சென்றிருந்த ஊடகவியலாளர்கள் பிரதேசத்தின் நகர பிதாவான ஒரு துப்பாக்கி ஏந்திய அரசாங்க அரசியல்வாதி உட்பட்ட ஒரு கலகக் குழுவால் அச்சுறுத்தப்பட்டும் மற்றும் முட்டைகள் வீசப்பட்டும் விரட்டியடிக்கப்பட்டனர்.[31] கலகக் குழு அதிகரித்தளவில் வன்முறை கொண்டவர்களாக மாறியதையடுத்து பாராளுமன்ற உறுப்பினர் கள் தங்கள் பரிசோதனை விஜயத்தைக் கைவிட்டனர். காடையர்கள் தாக்குகின்றதை, மிரட்டு வதை, அச்சுறுத்துகின்றதை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவை மற்றும் ஊடகவிய லாளர்களை விரட்டியடிப்பதைக் காண்பிக்கும் காணொலிகள் அதே போன்று புகைப்படங்கள் என்பன ஊடகங்களினால் பகிரங்கப்படுத்தப்பட்டன.[32] பிரதேசத்தில் அரசாங்கத்தின் அபிவிருத்திச் செயல்திட்டங்கள் மீதான நியாமற்ற கண்டனங்கள் தொடர்பாக ஏற்பட்ட 'பொதுமக்களின் கோபம்' என தாக்குதலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குறிப்பிட்டார். அரச கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்கள் ஜனநாயக ரீதியிலான மாற்று அபிப்பிராயத்தை தவிர அவை வேறில்லையென தாக்குதலை நியாயப்படுத்தின.[33]

தாக்குதலுக்கு உள்ளான பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரு ஊடக சந்திப்பில் பேசும்போது, ஜனாதிபதியின் குற்றச்சாட்டை மறுத்ததுடன், "ஐ.தே.க இன் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் எதனையும் தெரிவிக்கவில்லை என்பதோடு நாங்கள் எவருமே அத்தகைய ஒரு கருத்தைக் கூறவில்லையெனவும் தெரிவித்தனர். செயல்திட்டங்கள் மோசடியான வகையில் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் அவை ஐ.தே.க இன் கீழ் வெளிப்படையான வகையில் மேற்கொள்ளப்படும் என்றே நாம் கூறினோம்."[34]

---

[30] ibid
[31] http://www.sundaytimes.lk/top-story/48925.html (Last accessed 19th May 2014)
[32] https://www.youtube.com/watch?v=d4Hacx6mXT0 (Last accessed 19th May 2014)
[33] http://www.srilankabrief.org/2014/04/mob-rule-and-hambantota-doctrine.html#more (Last accessed 19th May 2014)
[34] http://www.dailymirror.lk/news/46058-unp-mps-dismiss-claims-made-by-mr.htm (Last accessed 19th May 2014)l




ஆளுங் கட்சி ஆதரவாளரொருவர் ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் திரு. அஜித் பெரெராவை மத்தளை விமான நிலைய வளாகத்தினுள் வைத்து எச்சரிக்கிறார் (photo; Daily Mirror)

ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான தாக்குதல் நாட்டில் ஒரு முக்கிய அரசியல் விவாதத்தை உருவாக்கியதுடன், மூன்று ஆங்கிலத் தினசரிகளுமே (அரசாங்கத்தால் நடாத்தப்படும் டெய்லி நியூஸ் தவிர்ந்து) நீதியும் நியாயமுமான விசாரணையைக் கோரி, கடுமையாகச் சாடும் ஆசிரியர் தலையங்கங்களை பிரசுரித்தன. அவை பின்வரும் தலைப்புகளில் அமைந்திருந்தன. (The horror of the '*Hambantota doctrine'* by Daily Mirror[35]; *Thugs and toys* by The Island[36]; *A slap on the face of parliamentary democracy* by Ceylon Today.[37]).

[35]http://www.dailymirror.lk/opinion/172-opinion/46082-the-horror-of-the-hambantota-doctrine-editorial.html (Last accessed 19th May 2014)
[36] http://www.island.lk/index.php?page_cat=news-section&page=news-section&code_title=55 (Last accessed 19th May 2014)
[37]http://ceylontoday.lk/52-61908-news-detail-a-slap-on-the-face-of-parliamentary-democracy.html (Last accessed 19th May 2014)